| Article Date | Headline / Summary | Publication |
|---|---|---|
| 8 Sep 2024 | Medical Insurance... Are Modern Treatments Allowed? | Nanayam Vikatan |



தபன் சிங்கேல்,
நிர்வாக இயக்குநர் & சி.இ.ஓ.
பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்ஷூரன்ஸ்





# மருத்துவக் காப்பீடு... நவீன சிகிச்சைகளுக்கும் அனுமதி உண்டா?

மருத்துவத்துறை நாளுக்கு நாள் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்து வருகிறது. நவீன மருத்துவ சிகிச்சைகள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களின் சேவைகள் ஆகியவற்றைப் பெறுவதற்கான கவரேஜை வழங்கும் காப்பீட்டை 'மாடர்ன் மெடிக்கல் ட்ரீட்மென்ட்ஸ் அண்ட் அட்வான்ஸ்ட் டெக்னாலஜி கவர்' (*Modern Medical Treatments and Advanced Technology*) என்று சொல்கிறோம். சரி, இந்தக் காப்பீட்டில் எந்த மாதிரியான கவரேஜ் கிடைக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

நவீன சிகிச்சைகள் என்பது தற்போது உலக அளவில் உள்ள பலதரப்பட்ட நோய்களுக்கான மேம்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய மருத்துவ சிகிச்சைகளாகும். இவற்றில் பின்வருவன எல்லாம் அடங்கும்.

**1. ரோபோடிக் அறுவைசிகிச்சைகள்**

ரோபோடிக் அறுவைசிகிச்சையானது, வழக்கமாகச் செய்யப்பட்டுவரும் சிகிச்சைகளுடன் ஒப்பிடும்போது, மேம்படுத்தப்பட்ட நவீன ரோபோக்களின் உதவி மூலம் மருத்துவர்கள் மேற்கொள்ளும் அறுவைசிகிச்சைகளாகும். இவை மிகச் சிக்கலான சிகிச்சைகளையும் அதி துல்லியமாகவும் எளிதாகவும் செய்ய மருத்துவர்களுக்கு உதவுகின்றன.

தற்போது சந்தையில் உள்ள பல மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களில் ரோபோடிக் அறுவைசிகிச்சைகளும் உள்ளடக்கப்பட்டு உள்ளன. ஏனெனில், அவை நோயிலிருந்து மீண்டு வரும் காலத்தைக் குறைப்பதிலும் மற்றும் அறுவைசிகிச்சை பலன்களை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**2. ஸ்டெம் செல் தெரபி**

ஸ்டெம் செல் தெரபி என்பது நம்முடைய செல்களைப் பயன்படுத்தி சேதமடைந்த திசுக்கள் மற்றும் உறுப்புகளை சரிசெய்வது மற்றும் மாற்றுவது ஆகியவற்றை உள்ளடக்கிய சிறந்த சிகிச்சை முறையாகும். லுகேமியா, லிம்போமா மற்றும் இன்னும் பிற மரபணு கோளாறுகள் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு இந்தச் சிகிச்சை முறை முதன்மையாக

உள்ளது. இதனால் தற்போதைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள், முன்னர் குணப்படுத்த முடியாத நிலையிலிருந்த நோய்களுக்கு இந்த ஸ்டெம் செல் தெரபி சிகிச்சையைப் பயன்படுத்த அனுமதிக்கின்றன.

**3. இம்யூனோதெரபி...**

இம்யூனோதெரபி என்ற நோய் எதிர்ப்பு சிகிச்சை ஒரு புதுமையான சிகிச்சை முறை. இது நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கு உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தைத் தயார்படுத்துகிறது. குறிப்பாக, புற்றுநோய் போன்ற நோய்களுக்கு இந்தச் சிகிச்சை அவசியமாகிறது. செக்பாயின்ட் இன்ஹிபிட்டர்ஸ், செல் தெரபி போன்ற சிகிச்சைகள் இதில் அடங்கும். மேலும், இந்தச் சிகிச்சையில் பாதிக்கப்பட்ட செல்களைச் சரிசெய்யும் அதே வேளையில் ஆரோக்கியமான திசுக்களைப் பாதிக்காமல் காப்பாற்றுவதிலும் கவனம் செலுத்துகிறது. இதனால் மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களில் இந்தச் சிகிச்சைக்கான கவரேஜும் வழங்கப்படுகிறது.

**மருத்துவத் துறையில் நவீன தொழில்நுட்பங்கள்...**

இன்றைய மருத்துவத் துறையில் பல நவீன தொழில்நுட்பங்கள் முதன்மையான இடத்தைப் பிடித்துள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்க்கலாம்.

**1. செயற்கை நுண்ணறிவு மற்றும் மெஷின் லேர்னிங்...**

இந்தத் தொழில்நுட்பங்கள் நோயாளிகள் சந்திக்கவிருக்கும் எதிர்கால விளைவுகளைக் கணிக்கவும், தனிப்பட்ட சிகிச்சை முறைகளைத் திட்டமிடவும் மற்றும் நோய் கண்டறியும் துல்லியத்தை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. காப்பீட்டு நிறுவனங்களும் மருத்துவத் துறையில் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் மெஷின் லேர்னிங் உள்ளிட்ட தொழில்நுட்பங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளன. எனவேதான் ஏ.ஐ உதவியுடனான நோய் கண்டறியும் கருவிகள் மற்றும் சிகிச்சை திட்டங்களுக்கான கவரேஜை காப்பீட்டுத் திட்டங்களில் சேர்த்துள்ளன.

**2. அணியக்கூடிய சாதனங்கள்...**

உடல் நலத்தையும், உடல் நலனில் ஏற்படக் கூடிய பிரச்னைகளையும் கண்டறியும் வகையில், உடல் இயக்கத்தின் முக்கிய அறிகுறிகளையும், உடல் செயல்பாடுகளையும் கண்காணிக்கும் வகையிலான அணியக்கூடிய சாதனங்கள் இப்போது பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பராமரிக்க இதுபோன்ற சாதனங்களைப் பயன்படுத்தும் பாலிசிதாரர்களுக்குக் காப்பீட்டு நிறுவனங்கள் சில தள்ளுபடிகள் அல்லது சலுகைகளை வழங்குகின்றன.

**3. எலெக்ட்ரானிக் ஹெல்த் ரெக்கார்ட்ஸ்...**

இந்த இ.ஹெச்.ஆர் (*Electronic Health Records-EHR*) பதிவுகள் நோயாளியின் தரவுகளை நிர்வகிப்பதில் செயல்திறனையும், துல்லியத்தையும் மேம்படுத்துகின்றன. எனவே, காப்பீட்டு நிறுவனங்கள் இந்த இ.ஹெச்.ஆர் பதிவுகளின் பயன்பாட்டை ஆதரிக்கின்றன. குறிப்பாக, இந்த இ.ஹெச்.ஆர் பதிவுகளைப் பயன்படுத்துவது மற்றும் பராமரிப்பதற்கான செலவுகளையும் கவரேஜ் செய்கின்றன.

**கூடுதல் கவரேஜ் மற்றும் ஒழுங்குமுறை அமைப்பின் ஆதரவு...**

அனைத்து மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களிலும் அடிப்படையான மருத்துவமனை மற்றும் தொடர்புடைய செலவுகளுக்கான கவரேஜ் உள்ளடக்கப்பட்டாலும், தொடர்ந்து வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட கூடுதலான கவரேஜ்களையும் உள்ளடக்கி விரிவுபடுத்துவதற்கான வழிகளைக் காப்பீட்டு நிறுவனங்கள் முயற்சி செய்கின்றன.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, அவர்கள் தற்போது தினபராமரிப்பு அடிப்படையிலான கீமோதெரபி, வாய்வழி கீமோதெரபி, இம்யூனோதெரபி, ஸ்டெம் செல் சிகிச்சைகள், கருவுறாமை பராமரிப்பு, வாடகைத் தாய் மற்றும் முன்னர் கவரேஜ்களிலிருந்து விலக்கப்பட்ட பல அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நடைமுறைகளுக்கான கவரேஜ்களையும் சேர்த்துள்ளனர்.

காப்பீட்டு நிறுவனங்களின் இந்த முயற்சியை இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (*IRDAI-Insurance Regulatory and Development Authority of India*) ஆதரிக்கிறது. மேலும், காப்பீட்டுத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டதாக மாற்றியமைக்கவும் காப்பீட்டு நிறுவனங்

களை ஊக்குவிக்கிறது.

ஒழுங்குமுறை அமைப்பின் வழிகாட்டுதல்களின்படி, நோய் எதிர்ப்பு சிகிச்சை, வாய்வழி கீமோதெரபி மற்றும் பிற 10 நவீன சிகிச்சை முறைகள் அனைத்தும் காப்பீட்டுத் திட்டங்களில் இடம்பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. காப்பீட்டு நிறுவனங்களும் இதை நேர்மறையான முன்னேற்றமாகக் கருதுகின்றனர், ஏனெனில், காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சையில் இருப்பவர்களின் நோய் விரைவாக குணமடைந்து மருத்துவமனையிலிருந்து வெளியேற அதிக வாய்ப்புள்ளது.



**கவரேஜ் மற்றும் செலவுகளைச் சமநிலைப்படுத்துதல்...**

ஒவ்வொரு காப்பீட்டு நிறுவனமும் பலதரப்பட்ட வாடிக்கையாளர் பிரிவுகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பல திட்டங்களைக் கொண்டுள்ளன. இவற்றில் ஓர் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை (*Comprehensive Health Insurance Cover*) வைத்திருப்பது சிறந்தது என்றாலும், காப்பீடு செய்யப்பட்ட நபர் தனது நிதி நிலைமைக்கும் பொருந்தக்கூடிய பாலிசியை விரும்ப வாய்ப்புள்ளது.

இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, காப்பீட்டு நிறுவனங்கள் பிரீமியங்களைக் குறைக்க உதவும் வகையிலான தேர்வுகளையும் வழங்குகின்றன. அதாவது, செயல்முறை அடிப்படையிலான வரம்புகள், துணை வரம்புகள், பணம் செலுத்துவதில் கூடுதல் வழிமுறைகள் மற்றும் விலக்குகள் போன்றவை அவற்றில் அடங்கும்.

இந்த நிலையில் தொழில்நுட்பங்களின் முன்னேற்றத்தால், மருத்துவ சிகிச்சை முறைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண முடிகிறது. இருப்பினும், இந்த முன்னேற்றங்கள் அதற்கேற்ற செலவுகளுடன்தான் வருகின்றன. எனவே, காப்பீட்டுத் திட்டங்களை உருவாக்கும்போது அவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எனவே, கவரேஜ்களையும் மற்றும் அதற்கான பிரீமியங்களையும் சமநிலைப்படுத்துதலிலும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பரிசோதனை சிகிச்சைகளை உள்ளடக்குவதிலும் காப்பீட்டு நிறுவனங்கள் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். அதேசமயம் வாடிக்கையாளர்களின் சேவை மற்றும் அனுபவத்தை மேம்படுத்தும் புதிய தொழில்நுட்பங்களுக்கும் கதவுகளைத் திறக்க வேண்டும்.

நவீன மருத்துவத்தை ஹெல்த் இன்ஷூரன்ஸ் பாலிசிகளில் ஒருங்கிணைப்பது, நோயாளிகளின் சிகிச்சை மற்றும் கவரேஜ் தேர்வுகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துகிறது. மருத்துவக் காப்பீடுகள் இப்போது மேம்பட்ட, மற்றும் சாத்தியமான உயிர்காக்கும் சிகிச்சைகளுக்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. இதன்மூலம் சிகிச்சைகளில் வெற்றிக்கான சதவிகிதமும் அதிகமாக இருக்கும்; நோயிலிருந்து மீண்டும் வரும் காலமும் குறையும். இது பாலிசிதாரர்களுக்கு விரைவான மற்றும் குறைவான வலி கொண்ட சிகிச்சைக்கும் உறுதி செய்கிறது.

சமீபத்திய மருத்துவ முன்னேற்றங்களை உள்ளடக்கிய விரிவான பாதுகாப்பு அம்சங்களை வழங்கும் காப்பீட்டு நிறுவனங்கள், இவற்றை சிறப்பாக முன்னெடுத்துக்கொண்டு செல்கின்றன என்பது நல்ல விஷயம்!